**DEPOSITION OF WITNESS**
**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 167/2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW3** | | |
| **Name** | : மூக்கையா | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : கருப்பையாத்தேவர் | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.08.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் சூலபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அசா.1 எனது தம்பி மனைவி ஆவார். மற்ற அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். கடந்த 04.06.2019ம் தேதி காலை சுமார் 10:00 மணியளவில் நான் எனது வீட்டில் பால்கணக்கு எழுதிக்கொண்டிருந்த போது புகார்தாரர் என் வீட்டிற்கு வந்து தான் தோட்டத்திற்கு செல்லும்போது ஒரு நபர் தான் அணிந்திருந்த 3 பவுன் தங்க செயினை இருசக்கர வாகனத்தில் வந்து அத்துக்கொண்டு சென்றுவிட்டதாக சொன்னதன்பேரில் அன்றையதினம் சுமார் 04:30 மணியளவில் நானும், அசா.1, அசா.2 ஆகியோருடன் காவல் நிலையம் சென்று அசா.1 புகார் கொடுப்பதற்கு நான் உதவியாக இருந்தேன். போலீசார் இரண்டு மாதங்கள் கழித்து நகையை திருடியவரை கண்டுபிடித்துவிட்டதாக சொன்னதன் பேரில் புகார்தாரர் நகையை பெற்றுக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**2.** எனக்கு எழுதபடிக்க தெரியும். அசா.1க்கு எழுதபடிக்க தெரியும். காவல் நிலையம் எங்கள் ஊரில் இருந்து 3 கி.மீ துாரம் இருக்கும். அசா.1, அசா.2 மற்றும் நான் ஆகிய மூவரும் சேர்ந்து காவல் நிலையம் சென்றோம். அசா.1 வாக்குமூலமாக கொடுத்தார், என்னிடமோ, அசா.2டமோ கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. எதிரியை நான் நேரடியாக பார்க்கவில்லை, அசா.1 சொல்லிதான் தெரியும். அசா.1 நகையை திரும்ப வாங்கும் போது நான் உடன் செல்லவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் அசா.1, அசா.2டன் புகார் கொடுப்பதற்காக காவல் நிலையம் செல்லவில்லை என்றும் அசா.1 காலை 10:00 மணியளவில் நான்

பால்கணக்கு எழுதிக்கொண்டிருந்த போது வழக்கு சம்பவம் பற்றி என்னிடம் எதுவும் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல.